முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம்.

Sc.No. 183/2023

நாள் 24.02.2025

(எதிரி ஆஜர் )

அ.த.சா. 14 திரு.மலைச்சாமி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதன்மை விசாரணை தொடர்ச்சி</u>

இவ்வழக்கில் சாட்சியான பால்பழனி என்பவர் JM No.2 நீதிமன்றத்தில் 164 வாக்குமூலம் கொடுத்தவரை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் சாட்சிகளை வீடியோ ஆடியோ பதிவு செய்த கருணாமூர்த்தி என்பவரை விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். இவ்வழக்கில் சாட்சியான பால்பழனிக்கும், எதிரியான சுப்ரமணியன் இருவருக்கும் உள்ள தொலைபேசி தொடர்பை CDR மூலமாக பெற்றுக்கொடுத்த முதல் நிலை காவலர் ஜெகதீஸ்வரன் என்வரை விசாரித்து அவரது வாக்குமூல்தை பதிவு செய்தேன். இவ்வழக்கில் பிரேத விசாரணை செய்வதற்காக அனுப்பிய மணிகண்டன் என்ற தலைமைக்காவலரை விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். விஸ்ரா அனுப்பிய 5 குப்பிகளை ஆய்வு செய்த அறிக்கை அனுப்பிய பகுப்பாய்வு நிபுணர் வெங்கடேஷ்வரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் கொடுத்த விஸ்ரா ரிபோர்ட் அ.த.சா.ஆ.14 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

இவ்வழக்கில் இறந்தவரின் உடலிற்கு AR Copy பதிவு செய்த டாக்டர் வினோதினி என்பவரை விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். இவ்வழக்கில் பிரேத விசாரணை செய்து அறிக்கை வழங்கிய டாக்டர் லெட்சுமி பிரியா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின்

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் அசோக்சக்கரவர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரியவந்ததால், எதிரி சுப்ரமணியன் மீது 302 இதச வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/ஏ.கே.மெக்பூப் அலிகான்,
முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .